# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.02/2025** **நாள் : 20.01.2025**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL)**
**ஆலந்தூர் மண்டலம், பவுல் வெல்ஸ் சாலையில் பிரதான குடிநீர் குழாய் மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்வதால் 22.01.2025 அன்று இரவு 09.00 மணி முதல் 24.01.2025 அன்று இரவு 9.00 மணி வரை (48 மணி நேரம்) மண்டலம் 9, 10, 11, 12, 13 – க்குட்பட்ட சில பகுதிகள் மற்றும் பல்லாவரம் நகராட்சிக்குட்பட்ட கவுல் பஜார், பொழிச்சலூர் பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.**

**<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) ஆலந்தூர் மண்டலம், பவுல் வெல்ஸ் சாலையில் பிரதான குடிநீர் குழாய் மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்வதால் **22.01.2025 அன்று இரவு 09.00 மணி முதல் 24.01.2025 அன்று இரவு 9.00 மணி வரை (48 மணி நேரம்)** மண்டலம் – 9 (தேனாம்பேட்டை) மண்டலம் – 10 (கோடம்பாக்கம்) மண்டலம் – 11 (வளசரவாக்கம்), மண்டலம் – 12 (ஆலந்தூர்), மண்டலம் – 13 (அடையாறு) – க்குட்பட்ட சில பகுதிகள் மற்றும் பல்லாவரம் நகராட்சிக்குட்பட்ட கவுல் பஜார், பொழிச்சலூர் பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படும்.

| மண்டலம் | பகுதிகள் |
|---|---|
| மண்டலம்–9 (தேனாம்பேட்டை) | எம்.ஆர்.சி நகர் |
| மண்டலம்–10 (கோடம்பாக்கம்) | ஈக்காட்டுதாங்கல் |
| மண்டலம்–11 (வளசரவாக்கம்) | வளசரவாக்கம் (பகுதி), ராமாபுரம் |
| மண்டலம்–12 (ஆலந்தூர்) | முகலிவாக்கம், மணப்பாக்கம், நந்தம்பாக்கம், ஆலந்தூர், நங்கநல்லூர், ஆதம்பாக்கம், மீனம்பாக்கம் |

| | |
|---|---|
| மண்டலம்–13 (அடையாறு) | பள்ளிப்பட்டு, வேளச்சேரி |
| பல்லாவரம் நகராட்சி | கவுல் பஜார், பொழிச்சலூர் |

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். மேலும், கூடுதல் தகவல்களுக்கு 044-4567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in